ஏழாம் வகுப்பு - பொதுத்தமிழ் பாடக்குறிப்புகள் பகுதி – 6

1] ஏர்முனைக்கு நேரிங்கே எதுவுமே இல்லே ! என்றும்நம்ம வாழ்விலே பஞ்சமே இல்லே ! – (ஏர்முனை) - இந்த பாடல் வரியின் ஆசிரியர் யார்?

1] கண்ணதாசன்

2] வாலி

3] பட்டுக்கோட்டை கலியாண சுந்தரம்

4] அ.மருதகாசி

2] பூமியிலே மாரியெல்லாம் சூரியனாலே – பயிர்; பூப்பதுவும் காய்ப்பதுவும் மாரி யினாலே – நாம்; - இந்த பாடல் வரியின் ஆசிரியர் யார்?

1] கண்ணதாசன்

2] வாலி

3] பட்டுக்கோட்டை கலியாண சுந்தரம்

4] அ.மருதகாசி

3] சேமமுற நாள்முழுதும் உழைப்பத னாலே – இந்தத் தேசமெல்லாம் செழித்திடுது நம்ம கையாலே ! (ஏர்முனை) - இந்த பாடல் வரியின் ஆசிரியர் யார்?

1] கண்ணதாசன்

2] வாலி

3] பட்டுக்கோட்டை கலியாண சுந்தரம்

4] அ.மருதகாசி

4] நெத்தி வேர்வை சிந்தினோமே முத்துமுத்தாக – அது நெல்மணியாய் விளைஞ்சிருக்குக் கொத்துக்கொத்தாக - இந்த பாடல் வரியின் ஆசிரியர் யார்?

1] கண்ணதாசன்

2] வாலி

3] பட்டுக்கோட்டை கலியாண சுந்தரம்

4] அ.மருதகாசி

5] பக்குவமாய் அறுத்துஅதைக் கட்டுகட்டாக – அடிச்சுப் பதருநீக்கிக் குவிச்சு வைப்போம் முட்டுமுட்டாக ! (ஏர்முனை) - இந்த பாடல் வரியின் ஆசிரியர் யார்?

1] கண்ணதாசன்

2] வாலி

3] பட்டுக்கோட்டை கலியாண சுந்தரம்

4] அ.மருதகாசி

6] வளர்ந்துவிட்ட பருவப்பெண் போல்உனக்கு வெட்கமா ? – தலை வளைஞ்சு சும்மா பாக்கிறியே தரையின்பக்கமா – இது - இந்த பாடல் வரியின் ஆசிரியர் யார்?

1] கண்ணதாசன்

2] வாலி

3] பட்டுக்கோட்டை கலியாண சுந்தரம்

4] அ.மருதகாசி

7] வளர்த்துவிட்ட தாய்க்குத் தரும்ஆசை முத்தமா? – என் மனைக்கு வரக்காத்திருக்கும் நீஎன் சொத்தம்மா – (ஏர்முனை) - இந்த பாடல் வரியின் ஆசிரியர் யார்?

1] கண்ணதாசன்

2] வாலி

3] பட்டுக்கோட்டை கலியாண சுந்தரம்

4] அ.மருதகாசி

8] பொருந்தாதது எது? சொற்பொருள் தருக.

1] மாரி – மழை

2] சேமம் – விதை

3] தேசம் – நாடு

4] முட்டு -குவியல்

குறிப்பு :- சேமம் – நலம்

9] திரைக்கவித் திலகம் அ. மருகதாசி அவர்கள் பிறந்த ஊர்?

1] தூத்துக்குடி மாவட்டத்திலுள்ள கோவில்பட்டி

2] விருதுநகர் மாவட்டத்திலுள்ள சாத்தூர்

3] திருவாரூர் மாவட்டத்திலுள்ள மன்னார்குடி

4] திருச்சி மாவட்டத்திலுள்ள மேலக்குடிகாடு

10] கீழ்க்கண்டவர்களுள் திரைக்கவித் திலகம் என அழைக்கப்படுபவர் யார்?

1] கண்ணதாசன்

2] வாலி

3] பட்டுக்கோட்டை கலியாண சுந்தரம்

4] அ.மருதகாசி

குறிப்பு :- "திரைக்கவித் திலகம் அ. மருகதாசி பாடல்கள்" என்னும் தலைப்பில் திரைக்கதைகளுக்கு எழுதிய பாடல்கள் தொகுக்கப்பட்டுள்ளன. "சமூகம்" என்னும் தலைப்பின்கீழ் இடம்பெற்றுள்ள பாடல், பாடப்பகுதியில் இடம்பெற்றுள்ளது.

11] திரைக்கவித் திலகம் அ. மருகதாசி அவர்கள் பெற்றோர் பெயர்?

1] வெங்கட்ராமன் - அம்மணியம்மாள்

2] சாத்தப்பன் - விசாலாட்சி

3] முத்தையா - கோமளவள்ளி

4] அய்யம்பெருமாள் – மிளகாயி அம்மாள்

12] திரைக்கவித் திலகம் அ. மருகதாசி அவர்களின் காலம்?

1] 13.02.1920 முதல் 29.11.1989 வரை

2] 13.02.1730 முதல் 29.11.1799 வரை

3] 13.02.1940 முதல் 29.11.1979 வரை

4] 13.02.1950 முதல் 29.11.1999 வரை

13] வீரன்நெடு வெள்வேல் வியன்செந்தில் எம்பெருமான் பாரில்உயி ரெல்லாம் படைத்தனன்காண் அம்மானை, - இந்த பாடல் வரியின் ஆசிரியர் யார்?

1] மறைமலையடிகள்

2] தாயுமானவர்

3] திரு.வி.க

4] ஈசான தேசிகர் என்னும் சுவாமிநாத தேசிகர்

14] பாரில்உயி ரெல்லாம் படைத்தனனே யாமாகில் ஆரணங்கள் நான்கும் அறிவனோ அம்மானை, அறிந்து சிறைஅயனுக் காக்கினன்காண் அம்மானை - இந்த பாடல் வரியின் ஆசிரியர் யார்?

1] மறைமலையடிகள்

2] தாயுமானவர்

3] திரு.வி.க

4] ஈசான தேசிகர் என்னும் சுவாமிநாத தேசிகர்

15] வீரன்நெடு வெள்வேல் வியன்செந்தில் எம்பெருமான் பாரில்உயி ரெல்லாம் படைத்தனன்காண் அம்மானை, - இந்த பாடல் வரி இடம்பெற்றுள்ள நூல்?

1] மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ்

2] திருச்செந்திற் கலம்பகம்

3] கலிங்கத்துப்பரணி

4] திருவாரூர் நான்மணிமாலை

16] பாரில்உயி ரெல்லாம் படைத்தனனே யாமாகில் ஆரணங்கள் நான்கும் அறிவனோ அம்மானை, அறிந்து சிறைஅயனுக் காக்கினன்காண் அம்மானை - இந்த பாடல் வரி இடம்பெற்றுள்ள நூல்?

1] மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ்

2] திருச்செந்திற் கலம்பகம்

3] கலிங்கத்துப்பரணி

4] திருவாரூர் நான்மணிமாலை

17] ------------------- என்பது, ஒருவகைக் காய் விளையாட்டு. இதுபெண்கள் விளையாடுதற்குரியது. பெண்கள் மூவர் வட்டமாக உட்கார்ந்துக்கொண்டு கல்லை மேலெறிந்து பிடித்தாடுவது அம்மானை விளையாட்டு. அங்கனம் ஆடுங்கால் முதலாமவர் இரண்டாமவரிடம் ஒரு கருத்தைக்கூறித் தொடங்க, இரண்டாமவர் மூன்றாமவரை அதுபற்றி வினவ, மூன்றாமவர் அதற்கு விடைகூறி முடிப்பதாக அமையும் சுவையான ஓர் உரையாடல் விளையாட்டு.

1] கண்ணாமூச்சி

2] தாயம்

3] அம்மானை

4] பல்லாங்குழி

குறிப்பு :- அம்மானை - இவ்விளையாட்டைத் தமிழக மகளிர் பண்டுதொட்டே ஆடி வருகின்றனர். நான்முகன் மறைகளைப் படைத்தவனாகவும், மறையை அறிந்தவனாகவும் இருந்தும் பிரணவப் பொருளைப் பற்றித் தெரியாததனால், முருகப்பெருமான் நான்முகனைச் சிறையில் அடைத்த செய்தியை வரலாறு கூறுகிறது. முருகப்பெருமான் சிறந்தவன், யாவும் அறிந்தவன் என்பது இப்பாடலில் உணர்த்தப் பெறுகிறது.

18] திருச்செந்திற் கலம்பகம் நூலின் ஆசிரியர் பெயர் என்ன?

1] மறைமலையடிகள்

2] தாயுமானவர்

3] திரு.வி.க

4] ஈசான தேசிகர் என்னும் சுவாமிநாத தேசிகர்

குறிப்பு :- ஈசான தேசிகர் என்பது அவருடைய சிறப்புப் பெயராகும்.

19] ஈசான தேசிகர் என்னும் சுவாமிநாத தேசிகர் அவர்களின் தந்தை பெயர்?

1] கந்தசாமி

2] தாண்டவமூர்த்தி

3] சுந்தரமூர்த்தி

4] மயிலேறும் பெருமாள்

20] ஈசான தேசிகர் என்னும் சுவாமிநாத தேசிகர் ---------------- என்பாரிடம் கல்வி கற்றார்.

1] வேங்கட மகாலிங்கம்

2] தாண்டவமூர்த்தி

3] சுந்தரமூர்த்தி

4] மயிலேறும் பெருமாள்

21] கீழ்க்கண்டவர்களுள், திருவாடுதுறை ஞானதேசிகராகிய அம்பலவாண தேசிகமூர்த்திக்குத் தொண்டராய் இருந்தவர் யார்?

1] மறைமலையடிகள்

2] தாயுமானவர்

3] திரு.வி.க

4] ஈசான தேசிகர் என்னும் சுவாமிநாத தேசிகர்

22] ஈசான தேசிகர் என்னும் சுவாமிநாத தேசிகர் அவர்கள் ஏறத்தாழ --------------- ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்தவர்.

1] 15

2] 150

3] 1500

4] 2000

23] திருச்செந்திற்கலம்பகம் என்னும் இந்நூல் -------------------------- இல் ஒன்று.

1] ஐம்பெரும் காப்பியங்கள்

2] எட்டுத்தொகை

3] பத்துப்பாட்டு

4] தொண்ணூற்றாறு சிற்றிலக்கிய வகை

குறிப்பு :- திருச்செந்திற்கலம்பகம் என்னும் இந்நூல் தொண்ணூற்றாறு சிற்றிலக்கிய வகைகளுள் ஒன்று. கலம்பகம் – கலம் + பகம் எனப் பிரியும். கலம் – பன்னிரண்டு. பகம் – ஆறு எனப் பதினெண் உறுப்புகளைக் கொண்டது. மேலும், பல்வகையான பா வகைகளும் கலந்திருத்தலால் இந்நூல் கலம்பகம் எனவும்பெயர் பெற்றது. பதினெண் உறுப்புகளில் ஒன்றாகிய அம்மானை என்னும் பகுதி, ஈண்டுப் பாடப்பகுதியாக இடம்பெற்றுள்ளது.

24] அம்மானைப் பாடலில் போற்றப்படும் தெய்வம்?

1] முருகன்

2] நான்முகன்

3] சிவன்

4] விஷ்ணு

25] முருகனால் சிறையிலிடப்பட்டவன்?

1] முருகன்

2] நான்முகன்

3] சிவன்

4] விஷ்ணு

26] ஒருமுறை திரு.வி.க அவரிடம் பூக்களில் சிறந்த பூ எதுவெனக் கேட்டனர். அதற்குத் திரு.வி.க சற்றும் தயங்காமல் -------------------- எனக் கூறினார்.

1] வேப்பம் பூ

2] பருத்திப் பூ

3] மல்லிகைப் பூ

4] தாமரைப் பூ

27] பொருந்தாதது எது?

1] திருப்பூர் - பின்னலாடைகள்

2] மதுரை - சுங்குடிப்புடவைகள்

3] உறையூர் - கண்டாங்கிச்சேலைகள்

4] சென்னிமலை - பட்டாடைகள்

குறிப்பு :- காஞ்சிபுரம் - பட்டாடைகள்; சென்னிமலை - போர்வைகள்.

28] உலகிலேயே கைத்தறி நெசவின் முன்னோடி ?

1] ஆந்திரா

2] கேரளா

3] மேற்கு வங்கம்

4] தமிழ்நாடு

29] நிலைத்த செல்வம் கல்விச் செல்வம் - என்ற சிறுகதையின் ஆசிரியர் யார்?

1] ராஜம் கிருஷ்ணன்

2] சுஜாதா

3] பி.எம்.முத்து

4] சி.சு.செல்லப்பா

30] ஒரு பெயரைக்கொண்டு முடியும் முற்றுப்பெறாத, வினைச்சொல்லே -------------------- ஆகும்.

1] வினையெச்சம்

2] வினைமுற்று

3] பெயரெச்சம்

4] வினைத்தொகை

குறிப்பு :- பெயரெச்சம் முக்காலத்திலும் வரும். (எ.கா) : பழுத்த பழம்.

31] வினையைக் (வினைமுற்றை) கொண்டு முடியும் எச்சம் ---------------- எனப்படும்.

1] வினையெச்சம்

2] வினைமுற்று

3] பெயரெச்சம்

4] வினைத்தொகை

குறிப்பு :- வினையெச்சசம் முக்காலத்தையும் உணர்த்தும். (எ.கா) : எடுத்து வந்தான்.

32] செயல் முடிந்ததனைக் குறிக்கும் சொல்லே ------------------ ஆகும்.

1] வினையெச்சம்

2] வினைமுற்று

3] பெயரெச்சம்

4] வினைத்தொகை

குறிப்பு :- வினைமுற்று, இது, மூன்று காலங்களில் ஒன்றனை உணர்த்தும், திணை, பால், எண், இடம், ஆகியவற்றைக் காட்டும். (எ.கா) : பழுத்த பழம் எடுத்து வந்தான். "வந்தான்" என்பது "செயல்" முற்றுப்பெற்றதனை உணர்த்துவதனால், இது வினைமுற்று ஆகும். பழுத்த என்னும் சொல், முற்றுப்பெறாத வினைச்சொல்.

winmeen

33] நம் முன்னோர் எப்பொருளை எச்சொல்லால் குறித்து வழங்கினார்களோ அப்பொருளை அச்சொல்லால் குறிப்பதே --------- எனப்படும். மரபுச் சொற்களைப் பயன்படுத்தாமல் வேறு சொற்களைப் பயன்படுத்துவது மரபுப்பிழை.

1] வழு

2] வழுவமைதி

3] மரபு

4] இவற்றில் ஏதுமில்லை

34] பொருந்தாதது எது? காய்களின் இளமை மரபு.

1] அவரைப் பிஞ்சு, கத்தரிப்பிஞ்சு

2] வாழைக்கச்சல், வெள்ளரிப்பிஞ்சு

3] தென்னங்குரும்பை

4] மாங்காய்

குறிப்பு :- விடை - மாவடு

35] பொருந்தாதது எது? விலங்குகள்: இளமை மரபு.

1] அணிற்பிள்ளை

2] குருவிக்குஞ்சு

3] பசுங்கன்று

4] யானைக்குட்டி

குறிப்பு :- யானைக்கன்று

36] பொருந்தாதது எது? விலங்குகள்: இளமை மரபு.

1] கழுதைக்குட்டி

2] குரங்குக்குட்டி

3] ஆட்டுக்குட்டி

4] சிங்கக்குட்டி

குறிப்பு :- சிங்கக்குருளை

37] பொருந்தாதது எது? விலங்குகள்: இளமை மரபு.

1] பன்றிக்குட்டி

2] கீரிப்பிள்ளை

3] புலிக்குட்டி

4] எலிக்குட்டி

குறிப்பு :- சரியானது:- புலிப்பறழ்

38] பொருந்தாதது எது? விலங்குகள்: இளமை மரபு.

1] கோழிக்குஞ்சு

2] மான்குட்டி

3] எருமைக்கன்று

4] குதிரைக்குட்டி

குறிப்பு :- சரியானது :- மான்கன்று

39] பொருந்தாதது எது? ஒலி மரபுச்சொற்கள்.

1] ஆந்தை அலறும்

2] குயில் அகவும்

3] கிளி கொஞ்சும்/ பேசும்

4] வாத்து கத்தும்

குறிப்பு :- சரியானது :- குயில் கூவும்

40] பொருந்தாதது எது? ஒலி மரபுச்சொற்கள்.

1] மயில் அகவும்

2] வண்டு கத்தும்

3] சேவல் கூவும்

4] கோழி கொக்கரிக்கும்

குறிப்பு :- சரியானது :- வண்டு முரலும்

41] பொருந்தாதது எது? ஒலி மரபுச்சொற்கள்.

1] காகம் கரையும்

2] கோட்டான் குழறும்

3] குருவி கீச்சிடும்

4] கூகை கத்தும்

குறிப்பு :- சரியானது :- கூகை குழறும்

42] பொருந்தாதது எது? ஒலி மரபுச்சொற்கள்.

1] புறா அலப்பும்

2] வானம்பாடி பாடும்

3] கோட்டான் குழறும்

4] வண்டு முரலும்

குறிப்பு :- சரியானது :- புறா குனுகும்

43] பொருந்தாதது எது? ஒலி மரபுச்சொற்கள்.

1] சிங்கம் முழங்கும்

2] நரி ஊளையிடும்

3] குதிரை கனைக்கும்

4] யானை உறுமும்

குறிப்பு :- சரியானது :- யானை பிளிறும்

44] பொருந்தாதது எது? வினை மரபுச் சொற்கள்

1] அப்பம் தின்

2] காய்கறி அரி

3] இலை பிடுங்கு

4] நெல் தூற்று

குறிப்பு :- சரியானது :- இலை பறி

45] பொருந்தாதது எது? வினை மரபுச் சொற்கள்

1] களை பறி

2] நீர் பாய்ச்சு

3] பாட்டுப் பாடு

4] மலர் பிடுங்கு

குறிப்பு :- சரியானது :- மலர் கொய்